ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2164/57 - 2020 පෙබරවාරි මස 28 වැනි සිකුරාදා - 2020.02.28
2164/57 ஆம் இலக்கம் - 2020ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: DS/VN/LA.A VITHTAGAPURAM.
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின்
குறிப்பு இல.: 4-3/5/2018/HA/15.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணி யிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

| | |
|---|---|
| மாகாணம் | : வடக்கு |
| மாவட்டம் | : யாழ்ப்பாணம் |
| பிரதேச செயலாளர் பிரிவு | : வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளை |
| கிராம அலுவலர் பிரிவு | : வித்தகபுரம் (J/223) |
| கிராமம் | : தெல்லிப்பளை தென்மேற்கு |
| ஆரம்ப வரைபட இல. | : பிபியா 2921 |
| நோக்கம் | : வித்தகபுரம் கிராம அலுவலர் (J/223)பிரிவிற் கான கிராம அலுவலகக் கட்டிடம் நிர்மாணிப்பதற் காக (கிராமச்செயலகம்) |

01. **துண்டு இல. 1**

காணியின் பெயர்: நீலாவத்தையும் கட்டுக் கும்பலையும்; விபரம்: தோட்டக் காணியில் ஒரு நிரந்தரக் கட்டிடம், ஒரு குழாய் கிணறு, ஒரு மலசலகூட குழி, இரண்டு தென்னை மரங்கள் (10 - 15 வருடங்கள்), இரண்டு வேப்ப மரங்கள் (5 - 10 வருடங்கள்) மற்றும் ஒரு தேக்கு மரம் (5 - 10 வருடங்கள்); உரிமை கோருபவர்: வைத்தீஸ்வரன் குணாளன்; விஸ்தீரணம்: 0.0312 ஹெக்டயார்.


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ச. சிவஸ்ரீ,
பிரதேச செயலாளர்,
வலிகாமம் வடக்கு,
தெல்லிப்பளை.

பிரதேச செயலகம்,
வலிகாமம் வடக்கு,
தெல்லிப்பளை,
2020, பெப்புருவரி 20.

03 - 532